කොමසාරිස් ජනරාල්
ஆணையாளர் நாயகம்
Commissioner General
011-2784815

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011-2784815

වෙබ් අඩවිය
இணையத் தளம்
Web Site
www.edupub.gov.lk

ඊ මේල්
மின்னஞ்சல்
e mail
commissioner_epd@yahoo.com

අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
Educational Publications Department

ඉසුරුපාය, බත්තරමුල්ල
இசுருபாய, பத்தரமுல்ல
Isurupaya, Battaramulla

මගේ අංකය / எமது இல. / My No. EPD / Dis / 01 / 01

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2020.09.28

சுற்றுநிருப இல: 27/ 2020

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அரசாங்க மற்றும் அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்,
பிரிவெனாப் பொறுப்பதிகாரிகள்.

## பாடசாலைப் பாடநூல்களை மீளப் பயன்படுத்தல்

1. அரசாங்கம் வருடாந்தம் சகல அரச பாடசாலைகள், அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கல்வி பயில்கின்ற மாணவர்களுக்குச் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் 410 வகையான சுமார் 40 மில்லியன் பாடநூல் பிரதிகளை இலவசமாக விநியோகிக்கின்றது. பாடநூல்களை அச்சிடுவதற்கும் விநியோகிப்பதற்குமாக அரசாங்கம் வருடாந்தம் சுமார் 4500 மில்லியன் ரூபாவைச் செலவு செய்கின்றது.

2. இவ்வாறு பெருந்தொகைப் பணம் செலவு செய்து ஆக்கப்படுகின்ற பாடநூல்களை மீளப் பயன்படுத்தக்கூடிய விதத்தில் பயன்படுத்தும் பொறுப்பு மாணவர்களையே சாரும். அத்துடன் அவர்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரைச் சாரும். பாடநூல்களில் முடிந்தளவு உச்சப்பயனைப் பெறும் பொருட்டு மீளப் பயன்படுத்துவதன் மூலம் சேமிக்கப்படுகின்ற மக்களின் நிதியை மீண்டும் கல்வித்துறையின் முன்னேற்றத்துக்காக அரசினால் செலவுசெய்ய முடியும்.

3. இதனால், வருடாந்தம் பயன்படுத்தும் பாடநூல்களில் **குறைந்தது 30%** ஐ மீளப் பயன்படுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதுடன், அது தொடர்பாகக் கீழ்வரும் விதிமுறைகளுக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்வதும் அவசியமாகும்.

| தரம் | பாடநூல்களை மீளப் பெறல் |
|---|---|
| 1,2,3,4,5 | மீளப் பெறுவது அவசியமில்லை. |
| 6,7,8,9 | வருட இறுதியில் மீளப் பெறப்படல் வேண்டும் |
| 10,11 | இந்த வகுப்புக்களில் க.பொ.த. (உ/த) வகுப்புக்கள் ஆரம்பமாகும் தினத்திலோ அல்லது உயர்தரத்துக்காக வேறொரு பாடசாலைக்குச் செல்வதற்காக விடுகைப்பத்திரம் எடுக்கவரும் சந்தர்ப்பத்திலோ மீளப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.<br>க.பொ.த.(சா/த)ப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவரொருவர் ஏதாவது ஒரு பாடத்திற்கு மீண்டும் தோற்றுவதற்கு விரும்பின் அப்பாடத்துக்குரிய பாடநூல்களை மீளப் பெற்றுக்கொள்ளக்கூடாது. சாதரண தரப் பரீட்சையின் எல்லாப் பாடங்களுக்கும் மீண்டும் தோற்றுவாராயின் அப்போதும் பாடநூல்களை மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது. |

4. கீழ்வரும் நிலைமைகளிலுள்ள பாடநூல்களை மீளப் பெறக்கூடாது.
   4.1. பக்கங்கள் கிழிந்த/ ஓரங்கள் மடிக்கப்பட்ட/ பக்கங்கள் கழன்றுள்ளவை.
   4.2. மேலுறை கழன்றுள்ளவை/ கிழிந்தவை.
   4.3. பக்கங்களில் குறிப்புகள் எழுதப்பட்டவை/ வர்ணம் பூசப்பட்டவை/ பகுதிகள் வெட்டி வேறாக்கப்பட்டவை.
   4.4. பயிற்சிகளுக்கான விடைகளைப் பாடநூல்களில் எழுதியிருத்தல்.(செயல் நூல்களுக்குப் பொருத்தமில்லை)

எவ்வாறாயினும் பொதுவாக, ஏதாவது பாடநூல்களை மீண்டும் பயன்படுத்துவதற்குப் பொருத்தமானது எனப் பாடநூல்களுக்குப் பொறுப்பான ஆசிரியர் இனங்காண்பாராயின் அப்பாடநூல்களை மீளப் பயன்படுத்த முடியும்.

5. மாணவர்களுக்குப் பாடநூல்களை விநியோகிக்கும்போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.
   - 5.1. எச்சந்தர்ப்பத்திலும் மாணவருக்கு வழங்கும் சகல பாடநூல்களும் பயன்படுத்தப்பட்ட பாடநூல்களாக இருக்கக்கூடாது.
   - 5.2 பயன்படுத்தப்பட்ட பாடநூல்கள் மற்றும் புதிய பாடநூல்களைப் பகிர்ந்தளிக்கும்போது எல்லா மாணவர்களும் சமமானவர்களே எனக் கருத்திற்கொண்டு பொருத்தமான விதத்தில் கலந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. பாடநூல்களைப் பயன்படுத்துவது தொடர்பில் கீழ்வரும் விடயங்களை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு அறிவித்தல் வேண்டும். பெற்றோருக்கு அறிவூட்டுதலை வகுப்பு மட்டத்தில்/ பாடசாலை மட்டத்திலான பெற்றோர் கூட்டங்களின்போது மேற்கொள்ள முடியும்.
   - 6.1. பாடநூல்களில் குறிப்புகள் எழுதுதல், நிறம் தீட்டுதல் கூடாது.
   - 6.2. படங்களை வெட்டி வேறாக்கக் கூடாது.
   - 6.3. பக்கங்களை கழற்றி வேறாக்கல், மடித்தல், கிழித்தல் கூடாது.
   - 6.4. பாடநூல்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத விதத்தில் புத்தகப் பையில் பாடநூல்களை அடுக்குதல் வேண்டும்.
   - 6.5. பாடநூல்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் வெளி அட்டைக்கு உறை இடப்படல் வேண்டும்.

7. இச்செயன்முறை தொடர்பில் அதிபரின் கண்காணிப்பின் கீழ் பாடநூல்களுக்குப் பொறுப்பான ஆசிரியர் மற்றும் வகுப்புப் பொறுப்பாசிரியர்கள் தமது பொறுப்புக்களை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டியதுடன் உரிய அறிக்கைகள், புள்ளி விபரங்களைப் (CR புத்தகத்தில் அல்லது கோவையொன்றின் மூலம்) பிழையின்றிப் பேணிவரல் வேண்டும். பாடநூல்களின் பாவனை தொடர்பில் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்குக் கல்வி அமைச்சின்/ கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின்/ மாகாணக் கல்வித் திணைக்களத்தின்/ வலயக் கல்விக் காரியாலயத்தின்/ கோட்டக் கல்விக் காரியாலயத்தின் உத்தியோகத்தர்கள் வருகை தருமிடத்து உரிய அட்டவணை மற்றும் அறிக்கை களை முன்வைத்தல் அவசியமாகும்.

8. பாடத்திட்ட மாற்றம் காரணமாக அல்லது பயன்படுத்த முடியாத நிலைக்கு உட்படுதல் போன்றவற்றால் அப்புறப்படுத்தப்படுகின்ற பாடநூல்களை 2014.02.20 திகதிய 2014 / 01 மற்றும் 2017.01.30 திகதிய 2014/01 (i) இலக்கமுடைய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் சுற்றுநிருபங்களிலுள்ள விதிமுறைகளுக்கு இணங்க அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9. இப்பாடநூல்களை மீளப்பயன்படுத்தும் செயற்பாட்டின் மூலம் மக்களின் நிதியை மீதப்படுத்துவது மாத்திரமன்றி வளங்களைக் கவனமாகப் பயன்படுத்தல், தியாக சிந்தை போன்ற சிறந்த மனப்பாங்குகளை மாணவர்களிடத்தில் வளர்த்தலும் அரசின் எதிர்பார்ப்புகளாகும்.

10. மேற்படி நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பாடசாலையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரான அதிபருக்குப் பாடநூல்களை மீளப் பயன்படுத்தும் செயற்பாட்டின் பிரதான பொறுப்பை ஒப்படைக்கின்றேன்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பலன்மிக்க செயற்பாடொன்று என இதனைக் கருத்திற் கொண்டு இச்செயற்பாட்டை வெற்றிகரமானதாக ஆக்குவதில் அவசியமான பூரண ஒத்துழைப்பை நல்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

இது தொடர்பில் இதற்கு முன்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள சகல சுற்று நிருபங்களும் இதன் மூலம் செல்லுபடியற்றதாகின்றன.

பேராசிரியர் கே. கபில சீ. கே. பெரேரா.
செயலாளர்
கல்வி அமைச்சு

Professor K. Kapila C.K. Perera
Secretary
Ministry of Education
"Isurupaya"
Pelawatte,
Battaramulla.